[1971 டிசம்பர் 14

ராவ்பகதூர் சுந்தரம்பிள்ளைக்கு நினைவுச்சின்னம்

* 352. வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இயற்றிய ராவ் பகதூர் சுந்தரம் பிள்ளைக்கு நினைவுச் சின்னம் எழுப்பும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அம்மாதிரியான கருத்து ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

இராசசிங்கமங்கலம் கண்மாய் குறுக்கே பாலம்

* 353. வினா—திரு. வீ. மலைக்கண்ணன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இளையான்குடி தொகுதியில் உள்ள இராசசிங்கமங்கலம் கண்மாய்க்கு குறுக்கே பாலம் அமைத்து, செங்குடி என்ற கிராமத்தை இராசசிங்கமங்கலம் சாலையோடு இணைக்க வேண்டுமென்று ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

நிலுவையான ஊராட்சி மன்ற வரிகள்

* 354. வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலுவையில் உள்ள ஊராட்சி மன்ற வரிகளை வசூலிக்கும் புதிய திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: உள்ளாட்சி மன்றங்களுக்குக் கிராமங்களில் இருந்து கட்ட வேண்டிய வரிப்பணம் வந்தால்தான் நடைமுறை வேலைகளைச் செய்ய முடியும். என்ன காரணத்தாலோ கிராமாதிகாரிகள் கடந்த காலங்களில் வரி வசூல் செய்வதைத் தாமதப்படுத்தினார்கள். அதன் காரணமாக பல கிராமங்களில்

1971 டிசம்பர் 14]

மின்சார விளக்குகள் எரிக்கக்கூடப் பணம் இல்லாத நிலைமை இருக்கிறது. இதைத் தகுந்த முறையில் தீவிரப்படுத்த ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இடையிலே சிறிது சுணக்கம் காட்டினார்கள். அதற்குப் பிறகு வருவாய்த் துறையின் சார்பாக கட்டாயம் வசூல் செய்து தரவேண்டுமென்று சுற்றறிக்கை விட்டு நடவடிக்கை எடுக்க புதிய திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வரி வசூலை கர்ணம், பட்டாமணியம் போன்றோர் கவனிக்க வேண்டுமென்று இருக்கிறது. அந்தப் பொறுப்பை வேறு யாரிடத்தில் ஒப்புவித்தால் சிறப்பாக நடைபெறும் என்று பார்த்து அவர்களைக் கொண்டு வசூலிக்க தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சிங்காநல்லூர் நகராட்சியில் சொத்து வரி.

*355. வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் நகராட்சியில் சொத்து வரி விதிப்பு சம்பந்தமாக நகராட்சி மன்றத்தினிடமிருந்து அரசுக்கு கோரிக்கை மனு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

(உ) கோரிக்கை மனுவின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) & (உ) அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த மனு வந்து வெகு நாட்களாயிற்று. இந்த வரிப் பிரச்சினை சம்பந்தமாக நகர மன்றத்தின் கோரிக்கை மீது முடிவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் லட்சக்கணக்கான வரிப்பணம் வசூலாகாமல் நிலுவையாக இருக்கின்றது. பின்னர் அதற்காக அந்த நகராட்சி மன்றத்தின் மீதே குற்றச்சாட்டாக வரக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, பரிசீலனையை அரசு விரைவில் முடித்து கோரிக்கையை ஏற்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுபற்றிய முடிவை விரைவில் எடுக்க எல்லாவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.